අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/06/05/01 - 2025

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2025.12. 08

அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதி /உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து பிரிவேனாதிபதிகள்,
அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை அதிபர்கள்

**அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களை மீள ஆரம்பித்தல்**

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான (இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகள் தவிர்ந்த) 2025 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் பாடசாலை தவணையின் இரண்டாம் கட்டம் 2025.12.16 ஆந் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்கிணங்க, கல்விச் செயற்பாடுகளைப் மேற்கொள்வது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

**1.0 கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக பாடசாலைகளை தயார்படுத்துதல்.**

1.1 இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகள் தவிர்த்து ஏனைய அனைத்துப் பாடசாலைகளிலும் தூய்மைப்படுத்தல் செயற்பாடுகளை உரிய தரப்பினருடன் ஒருங்கிணைப்புச் செய்து 2025.12.15ம் திகதிக்கு முன்னர் முறையாக மேற்கொள்ளப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதன் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்:

- ஆபத்தான மரங்கள் அல்லது மரக் கிளைகள் / கட்டிடங்கள் / மதில்கள் / கூரைகள் போன்றவை குறித்து ஆராய்ந்து அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- தூய்மைப்படுத்தல் மற்றும் நீர் வசதிகள்
- கிருமி நீக்கம் மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்

1.2 2025.12.15 ஆந் திகதி கல்வி மற்றும் கல்விசாரா பணியாளர்கள் அனைவரும் கடமைகளுக்காக சமூகமளிக்க வேண்டும், அத்துடன் 2025.12.16 ஆந் திகதியன்று பாடசாலை ஆரம்பிப்பதற்கு ஏற்ற நிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

1.3 இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 2025.12.16ம் திகதியன்று ஆரம்பிச்கப்படாத பாடசாலைகளின் கல்வி மற்றும் கல்விசாரா பணிக்குழுவினர் 2025.12.15ம் திகதியன்று தமது வதிவிடத்தை அண்மித்து அமைந்துள்ள கோட்ட/ வலயக் கல்வி அலுவலகங்களுக்கு சமூகமளிக்க வேண்டும். அன்றைய தினம் அவர்களது வரவு மற்றும் வெளியேறுகையை பதிவு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள்



CamScanner

மேற்கொள்ளப்படல் வேண்டும் உரிய வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அவ் உத்தியோகத்தர்களை சேவையின் தேவைகளுக்கமைய பொருத்தமான பாடசாலைகளுக்கு தற்காலிகமாக இணைப்புச் செய்ய வேண்டும்.

**2.0 2025ம் ஆண்டின் கல்விச் செயற்பாடுகளுக்காக பாடசாலைகளை ஆரம்பித்தல் மற்றும் நிறைவு செய்தல்**

2.1 பாடசாலைத் தவணை அட்டவணை - 2025 தொடர்பாக வெளியிடப்பட்ட இலக்கம் ED/09/12/06/05/01 -2025 மற்றும், 2025.04.23ம் திகதியுடைய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் பாடசாலைத் தவணையின் இரண்டாம் கட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட வேண்டும்.

**சிங்கள மற்றும் தமிழ்ப் பாடசாலைகள்:**

| **தவணை** | **தவணை நடைபெறும் காலப் பகுதி** |
|---|---|
| மூன்றாம் தவணை | <u>**இரண்டாம் கட்டம்**</u><br>2025.12.16 செவ்வாய் முதல் 2025.12.22 திங்கள் வரை<br>**(2025.12.23 ஆம் திகதி முதல் 2025.12.28 ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | <u>**மூன்றாம் கட்டம்**</u><br>2025.12.29 திங்கள் முதல் 2025.12.31 புதன் வரை |

**முஸ்லிம் பாடசாலைகள்:**

| **தவணை** | **தவணை நடைபெறும் காலப் பகுதி** |
|---|---|
| மூன்றாம் தவணை | <u>**இரண்டாம் கட்டம்**</u><br>2025.12.16 செவ்வாய் முதல் 2026.01.02 வெள்ளி வரை<br>(2025.12.27 சனிக் கிழமை உட்படலாக) |

**2.2 மூன்றாம் தவணையில் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

2.2.1 பாடத்திட்டம் நிறைவு செய்யப்படாத பாடசாலைகளில் பாடத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2.2.2 பாடத்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய பாடசாலைகளில் மீட்டல் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

2.2.3 அதே போன்று, தேசிய அனர்த்தம் ஒன்றின் போது செயற்பட வேண்டிய விதம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் நிவாரணச் சேவைகள் குறித்து அனைத்து மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மாணவர்களின் சமூக மனவெழுச்சித் திறன்களை மேம்படுத்துவது தொடர்பான வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முடியும்.

**2.3 தவணைப் பரீட்சை நடாத்துதல்.**

2.3.1 மாணவர்களை மீண்டும் பாடசாலைச் சூழலுக்குப் பழக்கப்படுத்தி, அவர்களின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டியுள்ளதால், பாடசாலை ஆரம்பித்தவுடன் 2025 ஆம் ஆண்டிற்கான மூன்றாம் தவணைப் பரீட்சை

CamScanner

நடவடிக்கைகள் மற்றும் போட்டிகளில் மாணவர்களை கலந்துகொள்ளச் செய்வது பொருத்தமற்றது என்பதை வலியுறுத்துகிறேன். தவணைப் பரீட்சைப் புள்ளிகளைக் கருத்தில் கொள்ளாமல் மாணவர்கள் அடுத்த வகுப்புக்குத் தரமுயர்த்தப்பட வேண்டும்.

2.3.2 தரம் 11 மாணவர்களுக்கு க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றுவதற்கான பயிற்சியாக அமைவதால், அந்த மாணவர்களுக்குப் பொருத்தமானவாறு 2026 ஜனவரி மாதத்தில் க்ஷநடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது.

2.3.3. தரம் 6 முதல் தரம் 9 வரையான மாணவர்களுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான மூன்றாம் தவணைப் பரீட்சை நடத்தப்படலாகாது என்பதுடன், அவர்களது அடைவு மட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக வகுப்பு மட்டத்தில் மதிப்பீடு செய்யும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

**3.0 2026ம் ஆண்டிற்கான கல்விச் செயற்பாடுகளுக்காக பாடசாலைகளை ஆரம்பித்தல் மற்றும் நடாத்திச் செல்லல்.**

3.1 பாடசாலை தவணை அட்டவணை - 2026 தொடர்பில் 2025.09.11ம் திகதி மற்றும் 30/2025 சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டின் முதலாம் தவணை கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுவதுடன், 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகள் மேற்படி சுற்றுநிருபத்தின் பிரகாரமே நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன் பரீட்சைத் திணைக்களத்தினூடாக வெளியிடப்பட்டுள்ள பாடசாலைப் பரீட்சைகள் நடாத்தப்படும் திகதிகளில் மாற்றம் செய்யப்படமாட்டாது.

**சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகள்:**

| **தவணை** | **தவணை நடைபெறும் காலப் பகுதி** |
|---|---|
| முதலாம் தவணை | **<u>முதலாம் கட்டம்</u>**<br>2026.01.05 திங்கள் முதல் 2026.01.09 வெள்ளி வரை<br>**(2025 – க.பொ.த (உயர் தர) பரீட்சையின் மீதிப் பாடங்களுக்கான பரீட்சைகளை நடாத்துவதற்காக 2026.01.10 ஆம் திகதி முதல் 2026.01.20 ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | **<u>இரண்டாம் கட்டம்</u>**<br>2026.01.21 புதன் முதல் 2026.02.13 வெள்ளி வரை<br>**(2025 (2026)- க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்காக 2026.02.14 ஆம் திகதி முதல் 2026.03.02 ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | **<u>மூன்றாம் கட்டம்</u>**<br>2026.03.03 செவ்வாய் முதல் 2026.04.10 வெள்ளி வரை<br>**(2026.04.11 ஆம் திகதி முதல் 2026.04.19ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |

CamScanner

முஸ்லிம் பாடசாலைகள்:

| தவணை | தவணை நடைபெறும் காலப் பகுதி |
|---|---|
| முதலாம் தவணை | <u>முதலாம் கட்டம்</u><br>2026.01.05 திங்கள் முதல் 2026.01.09 வெள்ளி வரை<br>**(2025 – க.பொ.த (உயர் தர) பரீட்சையின் மீதிப் பாடங்களுக்கான பரீட்சைகளை நடாத்துவதற்காக 2026.01.10 ஆம் திகதி முதல் 2026.01.20 ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | <u>இரண்டாம் கட்டம்</u><br>2026.01.21 புதன் முதல் 2026.02.13 வெள்ளி வரை<br>**(2025 (2026)- க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்காகவும், ரமழான் நோன்பினை முன்னிட்டும், 2026.02.14 ஆம் திகதி முதல் 2026.03.22 ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | <u>மூன்றாம் கட்டம்</u><br>2026.03.23 திங்கள் முதல் 2026.04.10 வெள்ளி வரையில்<br>**(2026.04.11 ஆம் திகதி முதல் 2026.04.19 ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்.)** |
| | <u>நான்காம் கட்டம்</u><br>2026.04.20 திங்கள் முதல் 2026.04.30 வியாழன் வரை<br>**(2026.05.01 ஆம் திகதி முதல் 2026.05.03 ஆம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |

3.2 2026 ஆம் ஆண்டிற்கான தரம் ஒன்று வகுப்புக்கள் 2026.01.22 ஆம் திகதி வியாழக் கிழமையன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

3.3 இவ் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2025.11.04 ஆம் திகதியுடைய சுற்றுநிருப இலக்கம் 34/2025 இன் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக 2026ம் ஆண்டிற்குரிய கால அட்டவணையைத் தயாரித்து, அதற்கமைய 2026 ஜனவரி 05ம் திகதி முதல் செயற்பட வேண்டும்.

3.4 2026 ஆம் ஆண்டின் முதலாம் தவணையின் முதலாம் கட்டத்தில், அதாவது 2026.01.05ம் திகதி முதல் 2026.01.09ம் திகதி வரையில் தரம் 6 மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு புதிய கல்வி மறுசீரமைப்புக்களை அறிமுகம் செய்வதற்கும் திசைமுகப்படுத்துவதற்கும் உரிய வேலைத்திட்டங்களை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன், 2026.01.21ம் திகதி முதல் புதிய கல்வி மறுசீரமைப்புக்களுக்குரியதாக கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இவ் விடயம் தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள் எதிர்வரும் காலத்தில் வழங்கப்படும்.

4.0 க.பொ.த (உயர் தரம்) – 2025 பரீட்சையின் இரண்டாம் கட்டம் 2026.01.12 திங்கட்கிழமை முதல் 2026.01.20 செவ்வாய்க்கிழமை வரை நடத்தப்படவுள்ளது.

CamScanner

## 5.0 பொதுவான விடயங்கள்

### 5.1 தற்காலிகமாக மாணவர்களை பாடசாலைகளுக்கு இணைத்தல்,

5.1.1 போக்குவரத்துச் சிரமங்களை எதிர்நோக்குகின்ற மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு, தமது வசிப்பிடத்திற்கு மிக அருகிலுள்ள பாடசாலையில் தற்காலிகமாக கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

5.1.2 வசிப்பிடத்திற்கு அருகிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தற்காலிகமாக இணைப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதுடன், அவ்வாறு பாடசாலைகளுக்கு இணைக்கப்படும் மாணவர்களின் தகவல்களைக் கொண்ட பதிவேடு வலயக் கல்வி அலுவலகத்தில் கோவைப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும்.

5.1.3 தற்காலிகமாக பாடசாலைக்கு இணைப்புச் செய்யப்படும் மாணவர்களது வரவினை தற்காலிக வரவு இடாப்பு ஒன்றில் பதிவு செய்ய வேண்டும்.

5.1.4 தற்காலிகமாக அனுமதிக்கப்படும் மாணவர்களிடமிருந்து எந்தவொரு கட்டணமும் அறவிடப்படலாகாது.

5.2 பாடசாலைகள் ஆரம்பித்ததன் பின்னர், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியல் மற்றும் அவர்களின் தேவைகள் தொடர்பான தகவல்கள் பேணப்பட வேண்டும். அத்துடன், குறித்த மாணவர்களின் உளவியல் நலன்களை மேம்படுத்துவதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

5.3 விசேட கல்வித் தேவைகளுடன் கூடிய மாணவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களுக்கு கல்விசார் உபகரணங்கள் மற்றும் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5.4 அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட க.பொ.த (உயர் தர) மற்றும் (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் தேவைகளை இனங்கண்டு, அவர்களுக்குத் தேவையான பாடக் குறிப்புகள் உட்பட கற்றல் உபகரணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், உளநலத்தைப் வலுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

5.5 அனர்த்த நிலைமை காரணமாக போக்குவரத்துச் சிரமங்கள் நிலவும், தூரப் பிரதேசங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு, விடுதிகள் உள்ள பாடசாலைகளில் வசதிக்கு ஏற்றவாறு தற்காலிகமாக விடுதி வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5.6 அனர்த்த நிலைமை மற்றும் ஏனைய நியாயமான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு, பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்படும் ஆரம்ப காலத்தில் மாணவர்களுக்குப் பாடசாலைச் சீருடை கட்டாயமில்லை, மாணவர்கள் மற்றும் கல்வி, கல்விசாரா உத்தியோகத்தர்கள் பாடசாலைக்கு பொருத்தமான ஆடைகளை அணிந்து பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு அறிவுறுத்தப்படல் வேண்டும்.

CamScanner

5.7 அனர்த்த நிலைமை காரணமாக போக்குவரத்துச் சிரமங்கள் நிலவும் மாணவர்கள் மற்றும் கல்வி, கல்விசாரா உத்தியோகத்தர்களின் பாடசாலைக்குச் சமூகமளிக்கும் மற்றும் வெளியேறும் நேரங்கள் தொடர்பாக அதிபர்கள் உரிய வலயக் கல்விப் பணிப்பாளர்களை அறியப்படுத்தி, பொருத்தமானவாறு சலுகை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

5.8 அனர்த்த நிவாரண செயற்பாடுகள்

5.8.1 அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்காக மாணவர்களிடம் எந்தவொரு விதத்திலும் பணம் அறவிடப்படலாகாது, அத்துடன் சிரமதான சேவை பெறப்படுமானால், 14 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களை மாத்திரம் பெற்றோர் அனுமதியுடனும் ஆசிரியர்களின் முழுமையான மேற்பார்வையின் கீழும் அதில் ஈடுபடுத்த வேண்டும்.

5.8.2 சிரமதான சேவைக்காக மாணவர்கள் தூரப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டால், இந்த அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 51/2023 இன் அறிவுறுத்தல்களின்படி வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுமதி பெறப்பட வேண்டும்.

5.9 பாடசாலை போஷாக்கு வேலைத்திட்டம்

5.9.1 பாடசாலைப் போஷாக்கு வேலைத்திட்டம் 2025.12.16 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் போஷாக்கு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும் போது பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பரிந்துரைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட வேண்டும்.

5.9.2 போஷாக்கு வேலைத்திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இலக்கம் 14/2025 மற்றும் 2025.04.01 ஆந் திகதியுடைய சுற்றுநிருபத்தின் படி, ஒரு உணவு வழங்குனர் மூலம் உணவு வழங்குவது அதிகபட்சம் 200 மாணவர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள போதிலும், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வழங்குனர்கள் தொடர்பில் பிரச்சினைகள் இருக்குமானால், 2025 ஆம் ஆண்டில் பாடசாலைகள் நடைபெறும் அடுத்த சில நாட்களுக்கு மாத்திரம் அந்த வரம்பைக் கருத்தில் கொள்ளாமல் செயற்பட வேண்டும்.

அத்துடன், இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 2025.12.16ம் திகதியன்று ஆரம்பிக்கப்படாத பாடசாலைகள் உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரால் தீர்மானிக்கப்படும் திகதியொன்றில் ஆரம்பிக்கப்படலாம் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாலக கலுவெவ
செயலாளர்

CamScanner